பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 08 | வியாழக்கிழமை | 24.07.2025 | அதிர்வு 354

### மயிலிட்டியில் இருந்து
## 6 மீனவர்களுடன் சென்ற படகு மாயம்



(ந.லோகதயாளன்)

யாழ்.மயிலிட்டியில் இருந்து ஆழ்கடல் 06





# செம்மணியில் நேற்று ஐந்து எலும்புக்கூடுகள்

### உடைந்த காப்பும், சிறுவர்களின் பாதணியும் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின் போது ஐந்து என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. இதன்படி செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 85ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 18ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது. 07

## சகோதரத்துவம் என்ற பெயரில் தமிழரின் உணர்வுகளைப் புண்படுத்தும் அநுர அரசு

### கொழும்பில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வில் விசனம்




கறுப்பு ஜூலை வாரத்தில் சகோதரத்துவம் எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் அரசு முன்னெடுக்கும் நிகழ்வு தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது என்று கொழும்பில் நேற்று நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவேந்தல் தின 07

## புதிய பிரதம நீதியரசராக சூரசேனவை நியமிக்க அரசமைப்பு சபை அனுமதி



இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவை 07




இலங்கையில் உயர்நீதிமன்றம் நேற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றை வழங்கி இருக்கின்றது.

நாட்டின் நிறைவேற்றதிகாரத் துறை தன்னிஷ்டப்படி - கண்மூடித்தனமாக - அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாது. அதில் நீதி முறைமைஇருக்கவேண்டும்என்பதைத்தன்னுடைய தீர்ப்பின் மூலம் உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கின்றது.

நிறைவேற்றதிகாரத்தின் மெத்தனப் போக்கைச் சுட்டிக்காட்டி, அதை நெறிப்படுத்த உயர் நீதிமன்றம் தன் தீர்ப்பின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று சிலாகித்தாலும், மறுபுறத்தில், அதே நீதிமன்றத்தின் – உயர் நீதிமன்றத்தின் – மெத்தனப் போக்கையும் அந்தத் தீர்ப்பு வெளிப்படுத்தி நிற்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டி இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடி, தமது பதவியை ராஜினாமாச் செய்தமையை அடுத்து, பதில் ஜனாதிபதியாகப் 06

# செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று நடைபெற்ற அகழ்வுப் பணி

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)












# மனிதப் புதைகுழிகள் நிறைந்த நாடாகவே உள்ளது இலங்கை!

## கறுப்பு ஜூலை படுகொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை என்று சிறீதரன் சுட்டிக்காட்டு



"இந்த நாட்டில் எங்கு தோண்டினாலும் எலும்புக்கூடுகள்தான் வருகின்றன. மனிதப் படுகொலைகள் நடைபெற்ற – மனிதப் புதைகுழிகள் நிறைந்த நாடாகவே இலங்கை உள்ளது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"இன்றைய நாள் இலங்கை வரலாற்றில் முக்கியமான நாள். இந்த நாட்டில் ஜூலை இனப்படுகொலை நடந்து 42 வருடங்களாகிவிட்டன. ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் லலித், காமினி திஸாநாயக்க போன்றவர்களின் வழிகாட்டலில் தமிழர்கள் மீது மிக மோசமான இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. வெலிக்கடைச் சிறையில் இருந்த குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்படப் பலர் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். பிறக்கப் போகின்ற தமிழீழத்தைப் பார்க்கவா போகின்றீர்கள் எனக் கேட்டு அவர்களின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன.

"ஜூலை 23" தமிழர்களின் வரலாற்றில் ஒரு கறுப்பு நாள். 42 வருடங்கள் கடந்தும் எந்தப் பொறுப்புக்கூறலும் இல்லாமல், நீதி இல்லாமல், விசாரணைகள் இல்லாமல் இருக்கின்ற இந்த நேரத்தில் அதனை நான் பதிவு செய்கின்றேன். இந்த நாட்டில் எந்த அரசு வந்தாலும் இதற்கு ஒரு மன்னிப்புக் கோரலையோ – நீதியான விசாரணைகளையோ – பரிகாரத்தையோ தேட முற்படவில்லை.

1984.03.11ஆம் திகதி இந்தியாவில் இருந்து வெளிவந்த "சண்டே" என்ற ஆங்கில சஞ்சிகை ஆசிரியர் அனிதா பிரதாப்புக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் 30 வயது நிரம்பிய தலைவரான பிரபாகரன் "ஜே.ஆர். ஒரு உண்மையான பௌத்தராக இருந்திருந்தால் நான் ஆயுதம் தூக்க நேர்ந்திருக்காது" என்று கூறினார்.

எமது மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. நாம் தொடர்ந்தும் நீதி கேட்டு போராடுகின்ற இனம். இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதியாக இருக்கின்ற அநுரகுமார ஒரு மண்குடிசையில் இருந்து இந்த நாட்டின் ஜனாதிபதியாக மாளிகை வரை வந்தவர். அம்மா சுட்டுக் கொடுத்த பலகாரங்களை ரயில்களில் விற்று சாதாரண பிரஜையாக வாழ்ந்து ஜனாதிபதியாகியுள்ளார். அடையாளம் உள்ள ஒரு தேசிய இனம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை உளப்பூர்வமாக உணரக்கூடிய ஒரு தலைவராக அநுரகுமார இருப்பார் என்றே நான் கருதுகின்றேன்.

நீங்களும் வியர்வையும் இரத்தமும் சிந்தி 56 ஆண்டுகளுக்கு பின்னர் ஆட்சி பீடம் ஏறியுள்ளீர்கள். வரலாறு யாரையும் காத்திருக்க வைப்பதில்லை. அதே போல் தமிழர்கள் சிந்திய இரத்தத்துக்கும் கண்ணீருக்கும் வரலாறு நிச்சயம் ஒரு வாய்ப்பைக் கொடுக்கும். அந்த வாய்ப்பை புரட்சியாளரான அநுரகுமார எவ்வாறு கையாளப் போகின்றார் என்ற விடயத்தைத்தான் நாம் பார்க்கின்றோம்.

இந்த நாட்டில் எங்கு தோண்டினாலும் எலும்புக்கூடுகள்தான் வருகின்றன. மனிதப் படுகொலைகள் நடைபெற்ற – மனிதப் புதைகுழிகள் நிறைந்த நாடாகவே இலங்கை உள்ளது. செம்மணியில் செவ்வாய்க்கிழமை வரை 80 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை இதற்கான நீதி விசாரணைக்கான கதவு திறக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

குறிப்பாக யாழ். மண்ணில் 2003ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில் அப்போதிருந்த கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் ஒரு குழு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினுடைய ஆதரவோடு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கை கவனத்தில் எடுக்கப்படாது கிடப்பில் போடப்பட்டுள்ளது. அறிக்கையின் விவரம் கூட வெளிவரவில்லை. 2003.10. 28ஆம் திகதி இந்த நாட்டின் தலைவர்களிடம் கொடுத்திருந்தார்கள். ஆனால், எந்தத் தீர்வும் யாருக்கும் கிடைக்கவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. நாட்டில் ஒரு தீர்வு பற்றி யோசிப்பதற்காக யாருமே சிந்திக்கவில்லை. இலங்கை – இந்திய ஒப்பந்தம் வந்தபோது ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சூழ்ச்சியால் அந்த ஒப்பந்தம் ஒரு நீதியான தீர்வு கொண்டு வருவதற்கான பாதையை திறக்கவில்லை.

அதேபோல் 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். யுத்தத்தை முடித்து வைத்த மன்னனாகவே அவர் பார்க்கப்பட்டார். ஆனால், அவருக்குக் கிடைத்த இலங்கையில் யாருக்குமே கிடைக்காத அந்த அருமையான வாய்ப்பை அவர் தன்னுடைய இயலாமை, இனவாதம் காரணமாகத் தவறவிட்டார். அதனை இல்லாமல் செய்தார். அதனால் இன்று அவரும் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றார்.

இந்த நாட்டின் தலைவர்களுக்கு அரிய வாய்ப்புக்கள் கிடைப்பதுண்டு. இன்றும் கூட ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. 159 எம்.பி.க்களை நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள். குறிப்பாக 2005ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதிக்கு முதல் சுனாமி கட்டமைப்பில் இருந்து விலக வேண்டும் என்று அப்போதைய தலைவர் சோமவன்ச தலைமையிலான ஜே.வி.பி. ஜனாதிபதி சந்திரிக்காவை வலியுறுத்தியது.

அந்தக் கட்டாயப்படுத்தலுக்கு சந்திரிகா பணியாததால் 16ஆம் திகதி சந்திரிகா அரசில் இருந்து ஜே.வி.பி. வெளியேறியது. 39 எம்.பிக்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி. 5 காரணங்களை முன்னிறுத்தி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்பை உடைத்தெறிந்தது.

இங்குள்ள ஜே.வி.பி. தோழர்கள் ஒரு போராளிகள். வரலாறு உங்களை 50 வருடங்களுக்குப் பின்னர் ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளது. இதேபோன்று தமது மண்ணில் போராடியவர்கள் மாவீரர்களாகத் துயிலும் இல்லங்களில் உறங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், அந்தத் துயிலும் இல்லங்களுக்கு மேலால் இராணுவம் முகாம்களை அமைத்து தமது சப்பாத்துக் கால்களுடன் நடந்து திரிகின்றது. உதைபந்தாட்டம் விளையாடுகின்றது. இவ்வாறான நிலையில் எப்படி சகோதரத்துவம் வரும்? உங்களுக்கும் எங்களுக்குமான உறவு எப்படி நீடிக்கும்? நீங்களும் நாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகளாக எவ்வாறு ஒன்றாக கைகோர்க்க முடியும்? தயவு செய்து சிந்தியுங்கள்.

நாங்கள் எதற்கும் புறம்பானவர்கள் அல்ல. யாரையும் தள்ளி வைத்து பார்க்கவில்லை. ஒற்றுமையை விரும்புகின்றோம். ஆனால் நாங்கள் நாங்களாக, தமிழர்கள் ஒரு தேசிய இனமாக, எங்களுக்கே உரித்தான இறையாண்மையின் அடிப்படையில் வடக்கு, கிழக்கிலுள்ள எமது பூர்வீக மண்ணில் வாழ்கின்ற உரிமையோடு இருப்பதற்கான உத்தரவாதத்தையே நாம் கேட்கின்றோம். இந்த உத்தரவாதம் கிடைக்காத வரைக்கும் இந்த நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு, ஒற்றுமை எவ்வாறு கிடைக்கும்?

வடக்கு, கிழக்கு என்பது தமிழர்களின் அபிவிருத்திக்கான பிரதேசம். ஆனால், அபிவிருத்தி செய்ய நீங்கள் பின்னடிக்கின்றீர்கள். தமிழர்கள் அபிவிருத்தியில் முன்னுக்கு வந்துவிடுவார்கள் எனப் பயப்படுகின்றீர்களா?

42 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் வர்த்தகத்துறையில் தமிழர்கள் செலுத்திய ஆதிக்கத்தை அழிக்கவே ஜே.ஆர்.ஜெயவர்த்தன கறுப்பு ஜூலை கலவரத்தைத் திட்டமிட்டு ஏற்படுத்தினார். தமிழர்களின் பொருளாதாரத்தை அவர் அழித்தார்.

நாம் மீண்டும் கேட்கின்றோம் இந்த நாட்டுக்குள் நாங்கள் நாங்களாக வாழ ஏன் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி, மட்டக்களப்பு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய முடியாது? தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் ஏன் பாலம் அமைக்க முடியாது? இந்த நாட்டில் உள்ளவர்களிடம் நல்ல எண்ணங்களைக் காண முடியாதுள்ளது.

அநுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்று 304 நாட்களாகிவிட்டன. அரசியல் ரீதியாக புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதனை இன்னும் முன்வைப்பதற்கான தயார் நிலை, அது பற்றி பேசுவதற்கான வாய்ப்பு இந்த அரசிடம் கொண்டுவரப்படவில்லை. வடக்கில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்கள் இன்னும் உறவினர் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் உள்ளனர். ஆனால், இங்கிருந்து சிலர் சகோதரத்துவ ரயிலில் அங்கு போகின்றார்கள். ஒரு சிங்கள தேசிய இனத்துக்குரிய அடையாளங்களை நாம் ஏற்றுக் கொள்வது போல் தமிழனத்திற்கான அடையாளங்களை நீங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்." – என்றார்.

# வெலிக்கடைப் படுகொலைகள் குறித்தும் விசாரணை வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வலியுறுத்து



தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்டோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வெலிக்கடைப் படுகொலை சம்பவம் தொடர்பில் அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

“வெலிக்கடைச் சிறைச்சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டே தோழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் எங்கே புதைக்கப்பட்டார்கள் என்பதை அறிய முடியாமல் உள்ளது. எனவே, கடந்த கால கொலைகள் பற்றி விசாரிக்கும் இந்த அரசு, வெலிக்கடைப் படுகொலை பற்றியும் விசாரிக்க வேண்டும். ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சிக் காலத்திலேயே இந்தச் ம்பவம் இடம்பெற்றது.” – என்றும் செல்வம் எம்.பி. குறிப்பிட்டார்.




# பிள்ளையானின் அடிப்படை உரிமை மீறல் மனு; விசாரணைக்கு ஏற்க உயர்நீதிமன்றம் தீர்மானம்

பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

தாம் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்குமாறு கோரி அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அரசமைப்பின் பிரிவுகள் 12(1)இன்படி சட்டத்தின் முன் சமமற்ற முறையில் நடத்துதல், 12(2)இன்படி அரசியல் கருத்தின் அடிப்படையில் பாகுபாடு, 13(1)இன்படி காரணமின்றிக் கைது மற்றும் 13(2)இன்படி சட்டத்தின் சரியான செயல்முறை இல்லாமல் கைது ஆகியவற்றின் கீழ் இந்த வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

மனுதாரரான பிள்ளையான் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா, சட்டத்தரணி உதய கம்மன்பில ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பிள்ளையான் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்

## ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களை நினைவுகூரும் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல்

**காலம் :- 26 . 07. 2025**
**நேரம் :- மாலை-03 . 00 மணி**

**இடம் :- தந்தை செல்வா நினைவு கேட்போர் கூடம் யாழ் மத்திய கல்லூரி வளாகம்**

அன்புரிமையுடன் அழைக்கின்றோம்!

**அன்புடையீர்**

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி மூத்த போராளிகள் ஜெகன், தேவன், நடேசுதாசன் உட்பட 53 ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களையும் பொது மக்களையும் அஞ்சலிக்கும் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல்

**தலைமை :-**

**திரு. குருசுவாமி சுரேந்திரன்**

**சிறப்பு விருந்தினர் :-**

**திரு. வீ . தனபாசிலிங்கம் மூத்த ஊடகவியலாளர்**

**விருந்தினர்கள்**

**கௌரவ சி வி கே சிவஞானம் அவைத் தலைவர் வடமாகாண சபை / பதில் தலைவர் இலங்கை தமிழ் அரசுக் கட்சி**

**கௌரவ . செல்வம் அடைக்கலநாதன் .பா.உ- தலைவர் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (DTNA)**

**கௌரவ . கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பா.உ - தலைவர் தமிழ் தேசிய பேரவை**

**திரு . தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைவர் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனி (DTNA)**

**திரு . சுரேஸ் பிறேமச்சந்திரன் தலைவர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (DTNA)**

**திரு . சி. நவீந்திரா [வேந்தன்] தலைவர் ஜனநாயக போராளிகள் கட்சி (DTNA)**

**திரு . முருகேசு சந்திரகுமார் தலைவர் சமத்துவக் கட்சி (DTNA)**

**நிகழ்வுகள்**

**அகவணக்கம்,, ஈகைச் சுடரேற்றல் ,, மலரஞ்சலி**

**தலைமையுரை**

**விருந்தினர் உரை**

**சிறப்புரை**

**நன்றியுரை**

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**
**தலைமைச் செயலகம்**
**யாழ் மாவட்டம்**

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பேற்றுக் கொண்ட அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2022 ஆம் ஆண்டு ஜுலை 17ஆம் திகதி பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நாட்டில் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தினார். அதன் கீழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அறகலயப் போராட்டம் உச்சம் பெற்று, நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் மக்கள் பெரும் கூட்டமாக நுழைந்து, பெரும் களேபரம் நிலவிய பின்புலத்தில், அந்தப் போராட்டம் தொடராமல் இருக்க, அதை தடுப்பதற்காக, இந்த அவசர காலச் சட்டத்தை பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரகடனப்படுத்தியிருந்தார்.

அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களின் மீதே நேற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்ற நீதியரசர் யஸந்த கோட்டாகொட வழங்கிய தீர்ப்புக்குத் தாம் இணங்குகிறாரெனப் பிரதம நீதியரசர் முருது என். பி. பெர்னாண்டோ அம்மையார் தெரிவித்திருந்தார். ஆனால், மூன்றாவது நீதியரசரான அர்ஜுனா ஒபயசேகர தனியான தீர்ப்பு ஒன்றை வழங்கினார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சமயத்தில் பிரகடனப்படுத்திய அவசர கால நிலைமை உரிய காரணங்கள் இன்றி அறிவிக்கப்பட்டமையினால் அந்த அறிவிப்பு தன்னிச்சையானது, செல்லுபடியற்றது மற்றும் அரசமைப்பின் தெளிவான மீறல் என்று இந்த இரு நீதியரசர்களும் அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அவசரகால நிலைப் பிரகடனம் மூலம் மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாக அவர்கள் இருவரும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் நீதியரசர் அர்ஜுன ஒபயசேகர மட்டும் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்புக்கு அமைவாகச் செயற்பட்டிருக்கிறார், அதனால் எவருடைய அடிப்படை உரிமைகளும் மீறப்படவில்லை என்ற முடிவை அறிவித்திருக்கிறார்.

ஆக, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சமயத்தில் பிரகடனப்படுத்திய அவசரச் காலகட்டம் செல்லுபடியற்றது என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் 2 – 1 ஆகப் பிரிந்து வழங்கி உள்ளது என்பதுதான் இதன் அர்த்தம்.

இதற்காக – அந்த அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியமைக்காக – அப்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக உயர் நீதிமன்றம் கட்டளை எதனையும் வழங்காமல் விட்டாலும், பெரும்பான்மைத் தீர்ப்புப்படி, அந்த உயர்நீதிமன்ற உத்தரவின் பிரதியை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பும்படி உயர் நீதிமன்றம் அதன் பதிவாளரை வழிப்படுத்தி இருக்கின்றது.

அதன் அர்த்தம், அத்தகைய நடவடிக்கையை – மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் – பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை பயன்படுத்தி முன்னெடுக்கக் கூடாது என்பதை இப்போது இருக்கின்ற மற்றும் இனி வரப் போகின்ற ஜனாதிபதிகளுக்கு உணர்த்துவதற்காக இந்த தீர்ப்பின் பிரதியை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது எனக் கருதப்படுகிறது.

சரி. இவ்வளவும் நேற்று வழங்கப்பட்ட தீர்ப்புப் பற்றிய விடயங்கள். ஆனால் இதற்கு உட்கிடையாக இருக்கும் சில விடயங்களை – உயர் நீதிமன்றத்தின் பின்னடைவுகளை – சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவை, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அபவாத நோக்கில் விமர்சிக்கும் விடயங்களல்ல.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி மெத்தனமாக நடந்து கொள்ளும்போது, அதனைச் சுட்டிக்காட்டுவதற்கு உயர் நீதிமன்றம் இருக்கின்றது. ஆனால் உயர்நீதிமன்றம் மெத்தனமாக நடந்தால், அதைச் சுட்டிக் காட்டுவது யார் என்பதுதான் கேள்வி. அதற்கு இந்த வழக்கும் தீர்ப்பும் கூட ஒரு முக்கிய சான்றாதாரங்கள் தாம்.

இப்போது பேசப்படுவது 2022 ஜுலை 17ஆம் திகதி அன்றைய பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரகடனப்படுத்திய அவசர நிலைமை பற்றிய விவகாரம் தான். ஏறத்தாழ 3 வருடங்களில் பின்னர் அதன் தீர்ப்பு இப்போது ஒருவாறு வந்திருக்கிறது. அந்த தீர்ப்பு இந்த சமயத்தில் வந்ததற்கும் பின்னணி உண்டு. அது கூட இப்போது நோக்கப்பட வேண்டிய விடயம்தான்.

ஆனால், இதற்கு முன்னர் – ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து நாட்டை விட்டு ஓட முன்னர் – அவரினால் பிறப்பிக்கப்பட்ட அவசர கால நிலைமைக்கு எதிராகவும் இதே போன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவை இன்னும் விசாரணை செய்யப்படவில்லை. கிடப்பில் போடப்பட்டுள்ளன. அவை விசாரணை செய்யப்பட்டு, இன்னும் சில ஆண்டுகளுக்கு பின்னர் எப்போதோ தீர்ப்பு வரலாம். வராமலும் போகலாம்.

இதுதான் இலங்கை உயர் நீதிமன்றத்தின் சீத்துவம்....!

இதில் இன்னொரு விடயமும் பொருந்தி இருக்கின்றது. அதைச் சுட்டிக் காட்டுவதற்கு இன்னும் இரண்டு வழக்குகளையும் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம் மிருசுவிலில் சிறுவர்கள் உட்பட 8 அப்பாவிப் பொதுமக்களைக் கழுத்தை வெட்டிப் படுகொலை செய்த வழக்கில், 'ட்ரயல் – அட் பார்' நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களால் ஏகமனதாக மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றத்தினால் மேன்முறையீட்டின் போது அந்த மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்ட சுனில் இரத்நாயக்கா என்ற இராணுவச் சிப்பாயை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு அளித்து விடுவித்தார். அதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அது தாக்கல் செய்யப்பட்டு, சில மாதங்களின் பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா அதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டார். அதற்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு பின்னர் தாக்கல் செய்யப்பட்டது.

இராணுவ சிப்பாய் சுனில் இரத்நாயக்கா விடுவிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், அதற்கும் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட துமிந்த சில்வா தொடர்பான வழக்கு விரைந்து விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டு, விடுதலையாகியிருந்த துமிந்த சில்வா மீண்டும் கைதாகி சிறையில் இருக்கின்றார்.

அதற்கு ஒரு வருடத்திற்கு முதல் தாக்கல் செய்யப்பட்ட சுனில் இரத்நாயக்காவின் வழக்கு அதன் பின்னர் ஆறுதலாக விசாரிக்கப்பட்டு, இப்போது தீர்ப்பு வழங்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நீண்ட காலமாகியும் தீர்ப்பு வரவில்லை. அது எப்போது வரும் என்பதும் தெரியவில்லை. இதுதான் உயர் நீதிமன்றத்தின் செயல் போக்கு.

இப்போதும் கூட, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அவசரகால நிலைப் பிரகடனத்துக்கு எதிரான வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கும், அதற்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்திய அவசர கால நிலைமைக்கு எதிரான வழக்கில் தீர்ப்பு வழங்கப்படாமல் இழுபடுகின்றமைக்கும் ஒரு காரணமுண்டு.

ரணிலுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்த நீதியரசர்களில் ஒருவர் தற்போது பிரதம நீதியரசராக கடமையாற்றும் முருது பெர்னாண்டோ அம்மணி ஆவார். அவர் இன்னும் இரண்டு தினங்களில் ஓய்வு பெற இருக்கிறார். அதனால்தான் அதற்கு முன்னர், அவர் விசாரணை செய்த இந்த வழக்கின் தீர்ப்பு காலம் குறிப்பிடப்படாமல் இழுபடவிடப்பட்ட பின்னர் நேற்று வந்திருக்கின்றது. அவர் (பிரதம நீதியரசர்) இன்னும் சில மாதங்கள் அல்லது சில ஆண்டுகள் பதவியில் இருப்பார் என்றால் இந்தத் தீர்ப்பு இப்போது வந்திருக்குமா என்பதை உயர்நீதிமன்றம் தனக்குத்தானே கேட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி வழக்குகளை உரிய காலத்தில் விசாரிக்காமல் – விசாரித்த வழக்குகளில் எப்போது தீர்ப்பு வழங்குவது என்பதை அறிவிக்காமல் – பின்னர் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு முன்னதாகத் தீர்ப்பும், அதே விடயத்தை ஒட்டி முன்னர் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு காலம் கடந்து பின்னர் தீர்ப்பும் வழங்கும் உயர் நீதிமன்றத்தின் போக்கு மக்களை நாட்டின் நீதித்துறை குறித்துக் கவலைக்குட்படுத்தும் பாணியகும்.

இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டுவதற்காக, உயர்நீதிமன்றத்தின் தனித்துவ அதிகாரத்தில் முறையற்ற விதத்தில் தலையிட்டமை என்ற பெயரில் எனக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு கூட உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரம்தான் அதன் தவறுகளையும் சுட்டிக்காட்ட முடியாத சூனிய நிலையை நோக்கி நமது சட்ட – நீதித்துறையை நகர்த்துகின்றது என நான் நினைக்கிறேன்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளின் மெத்தனப் போக்கைத் தட்டிக் கேட்கும் உயர் நீதிமன்றம், தன்னுடைய விடயத்திலும் அதைத் தட்டிக் கேட்டு சுட்டிக்காட்டுவதற்கான ஒரு முறைமையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று சட்டம் தெரியாத – புரியாத – ஒரு பாமரனாக என் கோரிக்கையை முன் வைக்கிறேன். இது உயர் நீதிமன்றின் காதில் விழுமா...? தெரியவில்லை...!

## 6 மீனவர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மீன்பிடிக்காக நான்கு நாள்களுக்கு முன்னர் 6 பேருடன் சென்ற படகு இதுவரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த நீண்டநாள் படகில் 6 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மயிலிட்டித் துறைமுகத்தில் இருந்து பயணித்துள்ளனர்.

இவ்வாறு மீனவர்களுடன் பயணித்த படகு இன்று அதிகாலை வரை கரை திரும்பாததோடு தொடர்பும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# ராஜிதவின் முன் பிணை மனு; 30 ஆம் திகதி விசாரணைக்கு!

முன் பிணையில் விடுவிக்க மறுத்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவைச் சீராய்வு செய்து தன்னைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 30ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திரிகா கலிங்கவன்ச முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

முன் பிணையை நிராகரித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் படாததால், இந்த மனு தொடர்பாக உத்தரவைப் பிறப்பிக்க முடியாது என்று மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்படி, குறித்த முன் பிணை மறுப்பு தீர்ப்பின் நகலைச் சமர்ப்பித்த பின்னர், இது தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு ராஜித சேனாரத்ன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து மனு மீதான பரிசீலனை எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## சகோதரத்துவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வில் விசனம் வெளியிடப்பட்டது.

42 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஆரம்பமான கொழும்பு, பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் கறுப்பு ஜுலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

வடக்கு தெற்கு சகோதரத்துவ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் சிவில் சமூகத்தினர், மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள், சகோதரத்துவம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் கறுப்பு ஜுலை வாரத்தில் அரசு முன்னெடுக்கும் நிகழ்வு குறித்து விசனம் வெளியிட்டனர்.

தமிழ் மக்கள் நீதி வேண்டி நிற்கின்ற இந்தத் தருணத்தில் அவர்களுக்கு நீதி வழங்குவதற்குப் பதில் அரசு சகோதரத்துவம் என்ற பெயரில் ஆடல் பாடல்களில் ஈடுபடுகின்றது என்று கறுப்பு ஜுலை நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

“கறுப்பு ஜுலை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் உணர்வு பூர்வமான விடயம். ஆனால், தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் அரசு நிகழ்வுகளை நடத்துகின்றது.” – என்று அவர்கள் விசனம் வெளியிட்டனர்.

“தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் விடயத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசுக்கும் அநுர அரசுக்கும் இடையில் வேறுபாடு இல்லை.” – என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்றைய அகழ்வின்போது ஐந்து மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இரண்டு என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப் பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 85 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 67 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் நேற்றைய அகழ்வின் போது காப்பு வடிவிலான சான்றுப் பொருள் ஒன்றும் உடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. மேலும் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட போத்தல் குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தல் என்பதும் உறுது செய்யப்பட்டுள்ளது. அதற்கு அருகில் நேற்று சிறுவர்களின் பாதணியை ஒத்த பொருள் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ். சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணி நேற்று இடம்பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோரும் நேற்றைய அகழ்வுப் பணியின் போது முன்னிலையாகியிருந்தனர்.

## புதிய பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நியமிக்கும் பரிந்துரையை அரசமைப்புச் சபை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அடுத்த பிரதம நீதியரசராக பிரீதி பத்மன் சூரசேனவின் பெயரைப் பரிந்துரைத்து அதை அரசமைப்பு சபைக்குச் சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி, நேற்று கூடிய அரசமைப்பு சபையால் ஜனாதிபதியின் பரிந்துரை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்

மலர்வு
04
-
03
-
1951



உதிர்வு
20
-
07
-
2025

## Dr.கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன்

(Chairman of Masterfeeds Pvt Ltd and Vethouse Pvt Ltd,
Past President of Rotary Club Colombo Midtown, Longstanding Past
President of Kokuvil Hindu College OSA, Colombo & Revered member of the
Chinmaya Mission - Sri Lanka)

அன்னார் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாக் குட்டி கணபதிப்பிள்ளை (கொக்குவில்) மற்றும் சீதாலக்ஷ்மி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா பரநிரூபசிங்கம் (கொக்குவில்) மங்கையற்கரசி பரநிரூபசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான லீலாவதி - செல்வரத்தினம், சரோஜினிதேவி - பஞ்சாட்ச்சரம், புஷ்பாவதி - ஸ்ரீ சடாச்சரம் மற்றும் கணபதிப்பிள்ளை குமரேசன் அவர்களது அன்புச் சகோதரரும், பிருந்தா, ஆர்த்திகா மற்றும் ராகுலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சித்தார்த், பவேஷ் மற்றும் ஸ்ரீ வித்யா ஆகியோரின் மாமனாரும், மியா, காரா ஆகி யோரின் அன்புப் பேரனும் சியாமினி, சியாமதி, சியாமீரா ஆகியோரின் அச்சா மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோலாலம்பூரில் 24.07.2025 வியாழக்கிழமையன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***இறுதிக்கிரியைகள் நடைபெறும் இடம்:***

Pertubuhan Perkuburan India
Wilayah Persekutuan
3161 Jalan 2/489
Bandar Barusentul,
Kuala Lumpur, 51000, Malaysia

***தொடர்புகளுக்கு:***

பிருந்தா (மலேசியா): + 60 11 1233 9169
ஆர்த்திகா (UK): + 44 7565 498299

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திணிக்கப்பட்ட அரசமைப்புகள்

மாற்றம் அடைந்து வரும் நவீன சமுதாயத்தில், நமது சட்ட முறைகள் தொடர்பில், பொதுமக்களின் கவலை அதிகரித்து வருகின்ற சூழலில், நாட்டின் சட்டங்களைப் புதுப்பிக்கும் அவசியம் குறித்து பிரதம நீதியரசர் முருது பெர்னாண்டோ அம்மையார் அடிக்கோடிட்டுக் காட்டி உள்ளார்.

ஒரு பெண்மணியாக நாட்டின் தலைமை நீதியரசர் பதவியை அலங்கரித்த அவர், இன்னும் மூன்று நாள்களில் பதவியிலிருந்து ஓய்வு பெற இருக்கிறார்.

அந்த நிலையில், இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய சட்டக் கருத்தரங்கின் தொடக்க அமர்வில் உரையாற்றிய போது, நாட்டை நீதி முறைமையான குடியரசை நோக்கி வழிநடத்துவதில் நெறிமுறை, ஒருமைப்பாடு, அரசமைப்பு மதிப்பு மற்றும் கூட்டு சட்ட வளர்ச்சியின் முக்கியத்துவம் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் சட்ட அமைப்புக் குறித்து பொதுமக்களிடையே வளர்ந்து வருகின்ற கவலைகள் பற்றி கவனத்தில் கொண்ட பிரதம நீதியரசர், பழமையான - மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யாத - பயன்தராத - சட்டங்களால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு உரிய சீர்திருத்தங்கள், மாற்றங்கள் அவசியமானவை என்பதை ஒப்புக்கொண்டார்.

நீதி நிலைநாட்டப்படுவதற்கு அடித்தளமாக உரிய நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும், சட்டம் உரிய திசையில் வழிநடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதம நீதியரசர், சட்டம் வலியுறுத்துகின்ற நெறிமுறைகள் மக்களுக்கும் நீதித்துறையினருக்கும் ஒரு சுமை அல்ல, அது சட்டம் சார்ந்த தொழிலில் அடிப்படையான இதயத்துடிப்பு, அந்த நெறிமுறையை இழந்தால் நாம் நீதித்துறையில் சேவை செய்ய வேண்டிய நமது அமைப்பின் சட்டபூர்வமான தன்மையை இழக்கிறோம் என்று சுட்டிக் காட்டினார்.

நாட்டின் அரசமைப்புச் சட்டம் குறித்து கருத்து தெரிவித்த பிரதம நீதியரசர், நாட்டின் நீதித்துறை நாட்டினுடைய அரசமைப்பை பாதுகாப்பது மட்டுமல்ல, அது துடிப்புள்ளதாக செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அரசமைப்பு நமது நாட்டின் துடிக்கும் இதயமாக இருந்தால், அந்த அரசமைப்பினால் பாதுகாக்கப்படும் குடிமக்கள் அதன் நரம்புகளில் பாயும் இரத்தமாக இருப்பார்கள் என்று ஓய்வு பெற்றுச் செல்ல இருக்கும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டு இருக்கிறார்.

உண்மைதான். நாட்டினதும் மக்களினதும் மனதை ஆகர்ஷித்ததாக - அந்த மக்களின் துடிக்கும் இதயமாக - அரசமைப்பு இருக்குமானால் அந்த நாடு மிக உயர்ந்ததாக விளங்கும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

ஆனால், இந்த இலங்கை தீவின் சிறுபான்மையினரை - குறிப்பாக இந்த மண்ணின் பூர்வீக இனமான தமிழர்களை - பொறுத்தவரை இப்போது நடைமுறையில் இருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி செய்த 1978 ஆம் ஆண்டின் அரசமைப்போ, அல்லது அதற்கு முன்னர் ஆறு ஆண்டுகள் நடைமுறையில் இருந்த 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசமைப்போ அவர்களின் பங்களிப்போடோ அல்லது விருப்போடோ அல்லது இணக்கத்தோடோ நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டவை அல்ல. இரண்டு அரசமைப்புக்களும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க சக்திகளினால், சிறுபான்மையினரான தமிழர்கள் மீது வல்வந்தமாக திணிக்கப்பட்டவை. அவற்றின் கீழ் தமிழர்கள் அடக்கப்பட்டு ஆளப்படுகிறார்கள் என்பது தமிழர்களுடைய கருத்து நிலைப்பாடாக இருக்கின்றது.

ஆகையால்தான், இந்த அரசமைப்பும் அதை பாதுகாப்பதற்காகப் போராடும் உயர்நீதிமன்றம் உட்பட்ட இலங்கையின் நீதி துறையும் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் இதயத் துடிப்பாகக் கருதப்படாமல், அவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தப்படும் அநீதியான சட்ட விலங்காக அவர்களால் கருதப்படுகின்றது.

இலங்கையின் பிரதம நீதியரசர் உட்பட்ட நீதித்துறையினர் தமிழ் மக்களின் இந்த அடிப்படை மனோ நிலைப்பாட்டை புரிந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் இலங்கை நீதித்துறை மீது அவநம்பிக்கையும் காழ்ப்புணர்வும் கொண்டிருப்பதற்கான காரணம் இது என்பதை இலங்கையின் நீதித்துறையினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

# அகமதாபாத் விமான விபத்தில் இறந்தோரின் சடலங்களை ஒப்படைப்பதில் குளறுபடிகள்!

## பிரிட்டன் ஊடக செய்திக்கு இந்தியா மறுப்பு

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்த பிரிட்டன் நாட்டவர்களின் உடல்களை ஒப்படைப்பதில் குளறுபடிகள் நடந்துள்ளன என பிரிட்டன் ஊடகங்கள் வெளியிட்ட செய்திக்கு இந்திய வெளியுறவுத் துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் 12 ஆம் திகதி குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787-8 விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். விமானம் மோதிய மருத்துவமனை விடுதியில் இருந்தவர்கள் உட்பட இந்த விபத்தில் மொத்தம் 260 பேர் உயிரிழந்தனர்.

விமானம் தீ பற்றி எரிந்ததில் பலரது உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகின. இதன் காரணமாக அத்தகைய உடல்கள் டி.என்.ஏ. சோதனைகள் மூலம் அடையாளம் காணப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்தில், பிரிட்டனை சேர்ந்த 53 பேர், போர்த்துக்கலை சேர்ந்த 7 பேர், கனடாவைச் சேர்ந்த ஒருவர் ஆகியோரும் உயிரிழந்தனர். அவர்களின் உடல்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்நிலையில், பிரிட்டனுக்கு அனுப்பப்பட்ட சவப்பெட்டி ஒன்றில், அடையாளம் தெரியாத பயணி ஒருவரின் உடல் இருப்பதாகவும், இதனால் இறுதிச் சடங்கு கைவிடப்பட்டதாகவும் செய்தி வெளியானது. ஒரே சவப்பெட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட உடல்களின் பாகங்கள் இருப்பதாக மற்றொரு குடும்பம் புகார் தெரிவித்திருந்தது. பாதிக்கப்பட்ட பல பிரிட்டன் குடும்ங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விமான வழக்கறிஞர் ஜேம்ஸ் ஹீலி பிராட் தெரிவிக்கையில், "சிலர்



தவறான உடல்களை பெற்றுள்ளனர். இது குறித்து அவர்கள் கலக்கமடைந்துள்ளனர். இரண்டு வாரங்களாக இது நடந்து வருகிறது. இந்த குடும்பங்களுக்கு விளக்கம் தேவை" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்திர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"துயரமான விமான விபத்தைத் தொடர்ந்து நிறுவப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் அடிப்படையில் உயிரிழந்தவர்களின் உடல்களை அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் அனைத்து உடல்களும் மிகுந்த தொழில்முறையுடனும் கண்ணியத்துடனும் உரிய மரியாதையுடனும் கையாளப்பட்டன. இந்த விவகாரத்தில் எந்த ஒரு கவலையை நிவர்த்தி செய்யப்படும். இதற்காக நாங்கள் பிரிட்டன் அதிகாரிகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

# 5 ஆண்டுகளுக்குப் பிறகு சீனர்களுக்கு சுற்றுலா விசாவை வழங்கும் இந்தியா!



சீன நாட்டவர்கள் இந்தியாவுக்கு சுற்றுலா வருவதற்கான விசா சேவையை, 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மீண்டும் இன்று தொடங்குகிறது.

இது தொடர்பாக சீனாவில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் சமூக ஊடக பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில்,

"சீனகுடிமக்கள் இந்தியாவுக்குவருகை தர சுற்றுலா விசாவுக்கு ஜூலை 24 முதல் விண்ணப்பிக்கலாம். முதலில் ஒன்லைன் முறையில் விசா கோரி விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு, இந்திய விசா விண்ணப்ப மையத்தில் விசா விண்ணப்பம் மற்றும் கடவுச்சீட்டு உள்ளிட்டவற்றை சமர்ப்பிக்க வேண்டும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சீனாவின் குளோபல் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"சீன குடிமக்கள் இந்தியாவுக்கு சுற்றுலா செல்ல சுற்றுலா விசா கோரி பீஜிங், ஷாங்காய், குவாங்சோ ஆகிய மாநகரங்களில் உள்ள இந்திய விசா விண்ணப்ப மையங்களில் நேரில் சமர்ப்பித்து விசா பெறலாம். 2020 ஆம் ஆண்டு சுற்றுலா விசா சேவை நிறுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத் தாக்கில் இந்திய – சீன இராணுவத்துக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து 2020 முதல் சீன நாட்டவர்களுக்கான சுற்றுலா விசா சேவையை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியது. மேலும், சீன முதலீட்டாளர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான சீன செயலிகள் தடை செய்யப்பட்டன. கொவிட் பெருந்தொற்றை கருத்தில் கொண்டும், சீன நாட்டினருக்கான விசா சேவை நிறுத்தம் நீட்டிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், இரு நாடுகளுக்கு இடையே சுமுக உறவு அதிகரிக்கத் தொடங்கி இருப்பதை அடுத்து, விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கி இருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரியில், இரு நாடுகளுக்கு இடையே விமானப் போக்குவரத்தை மீண்டும் தொடங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

மேற்கு திபெத்தில் உள்ள கைலாஷ் மற்றும் மானசரோவர் ஏரிக்கு இந்தியர்கள் செல்வதற்கு தனது எல்லையை சீனா திறந்தது. இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியின் சீன பயணத்தை அடுத்து இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# போரை முடிவுக்குக் கொண்டு வர புடினை சந்தித்து பேசுவதற்கு தயார்

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு



போரை முடிவுக்குக் கொண்டு வர, ரஷ்ய ஜனாதிபதி புடினை நேரில் சந்தித்துப் பேசத் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இந்த போரை ஒருபோதும் விரும்பவில்லை எனவும், போரைத் தொடங்கிய ரஷ்யா தான், அதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உயர்மட்ட சந்திப்புகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன், நிறைய வேலைகள் செய்ய வேண்டும் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விரைவில் ஒரு உச்சி மாநாடு நடைபெறும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், ரஷ்யா தற்போது உக்ரைனில் பல்வேறு பகுதிகளை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# பதவி விலகும் எண்ணம் இல்லை; ஜப்பானியப் பிரதமர் தெரிவிப்பு

ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு இஷிபா பதவி விலகத் திட்டமிட்டுள்ளார் என வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஆளும் கூட்டணி, மேல் சபையில் பெரும்பான்மையை இழந்ததையடுத்து, ஜப்பானியப் பிரதமர் ஷிகெரு இஷிபா பதவி விலகத் தீர்மானித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், தான் பதவி விலகத் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தியை ஜப்பானிய பிரதமர் மறுத்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# சர்ச்சைக்குரிய சட்டமூலத்துக்கு எதிராக உக்ரைனில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்




உக்ரைனின் ஊழல் எதிர்ப்பு அமைப்புகளின் சுதந்திரத்தை பலவீனப்படுத்துவதாக விமர்சகர்கள் கூறும் ஒரு சட்டமூலத்தில் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கையெழுத்திட்டுள்ளார்.

இது நாட்டின் பல நகரங்களில் போராட்டங்களைத் தூண்டியுள்ளது.

புதிய சட்டம் தேசிய ஊழல் தடுப்புப் பணியகம் மற்றும் சிறப்பு ஊழல் தடுப்பு சட்டத்தரணிகள் அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரத்தை கட்டுப்படுத்துகிறது.

மேலும் இது அவர்களின் அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

2022 பெப்ரவரியில் ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு தொடங்கிய பின்னர் மிகப் பெரிய போராட்டத்துக்கும் இந்த சட்டம் வழிவகுத்துள்ளது.



# இரு கைகளிலும் வெட்டுக் காயங்களுடன் யாழ்.வைத்தியசாலையில் ஒருவர் அனுமதி

**(ந.லோகதயாளன்)**

இரு கைகளிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இரு கைகளிலும் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட ஒருவர் 119 அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் 24 ஆம் இலக்க விடுதியின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள போதும் அவரது பெயர் விவரங்கள் ஏதும் பதிவிடப்படவில்லை.

வைத்தியசாலையில் பெயர் விவரங்கள் பதியப்படாதமையால் கைகள் வெட்டப்பட்டமைக்கான காரணம் உடனடியாகக் கண்டறியப்படவில்லை.








# தந்தையை நினைந்து வழிபாடு செய்வதற்கு உரிய சிறப்பு நாள் ஆடி அமாவாசை...!

ஆடி அமாவாசை நாளில், அதிகாலையில் எழுந்திருத்தல், சமயச் சடங்குகள், கோவில்களுக்குச் செல்வது, முன்னோர்களுக்கு வழிபாடு செய்வது, முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அமாவாசையன்று எமது முன்னோர்களை நினைத்து தர்ப்பணம் செய்தால் அவர்கள் மன குளிர்ந்து நமக்கு ஆசி அளிப்பார்கள் என்பது ஐதீகம்.

ஆடி அமாவாசை நாளில் கடல் அல்லது புண்ணிய நதிகளில் நீராடினால் பாவங்கள் நீங்கும் என்பதும் நம்பிக்கை.

அமாவாசை என்பது தந்தையை நினைந்து வழிபாடு செய்வதற்கு உரிய சிறப்பு நாளாகும்.

இந்த நாளில், தந்தையை நினைத்து விரதம் இருந்து, அவர்களுக்கு பிடித்தமான உணவு சமைத்து, அதை முன்னோர்களுக்கு கொடுப்பதாக நினைத்து காக்கைகளுக்குக் கொடுத்த பிறகு வீட்டில் உள்ள அனைவரும் சாப்பிடுவது தான் வழக்கம்.

ஆடி அமாவாசை நாளில் உங்களால் முடிந்த அளவுக்கு வயதானவர்களுக்கு, ஏழைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு போன்றோருக்கு அன்னதானம் வழங்குங்கள். குறைந்தபட்சம் 11 பேருக்காவது நீங்கள் உங்கள் கைகளால் அன்னதானம் வழங்கினால், முன்னோர்களின் சாபம் நீங்கும்.

அதுமட்டுமின்றி, உங்கள் வாழ்க்கையில் இருக்கும் தோல்விகள், கஷ்டங்கள் அனைத்தும் நீங்கும்.

வருடம் முழுவதும் வரும் அமாவாசையில் பித்ருகளுக்கு தர்ப்பணம் கொடுக்க தவறினாலும், அமாவாசை தர்ப்பணம் கொடுக்கும் போதும் ஏதாவது குறை ஏற்பட்டிருந்தாலும் அதனால் ஏற்படும் பித்ரு தோஷமானது ஆடி அமாவாசையில் தானங்களை கொடுப்பதால் அவை நீங்கி விடும்.

நீர் நிலைகளுக்கு சென்று தர்ப்பணம் கொடுத்தாலும், வீட்டில் முன்னோர்களின் படங்களுக்கு விளக்கேற்றாமல் இருக்கக் கூடாது.

பூஜை அறையில் விளக்கேற்றுவதுடன், தனியாக முன்னோர்களது படத்துக்கு முன் ஒரு அகல் விளக்கு வைத்து நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்ற வேண்டும்.

முன்னோர்களுக்கு படையல் போட்ட உணவை வீட்டில் உள்ளவர்கள் மட்டுமே சாப்பிட வேண்டும். மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடாது.

வெளி ஆள்களை வீட்டுக்கு அழைத்து உணவளிக்கக் கூடாது. அப்படி உணவளிப்பதாக இருந்தால் பகல் 12 மணிக்கு பிறகு தான் உணவளிக்க வேண்டும்.

முன்னோர்களுக்குப் படையல் போடும் போது ஒற்றை இலையாக போடக் கூடாது. இரண்டு இலைகள் போட்டுத் தான் படையல் இட வேண்டும்.

பித்ருக்கள் போட்டோக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக வைக்கக் கூடாது. ஒரே இடத்தில் வைத்தே படையல் போட வேண்டும்.

காகத்துக்குச் சாதம் வைத்த பிறகுதான் பித்ருக்களுக்கு படையில் இட வேண்டும். அதற்கு முன்பாக படையல் இட கூடாது.

ஆடி அமாவாசை அன்று நகம் வெட்டக் கூடாது. பெண்கள் தலையை விரித்து போட்டபடி இருக்கக் கூடாது.

நெற்றியில் குங்குமம், திருநீறு இல்லாமல் இருக்கக் கூடாது. பெண்கள் குளித்து விட்டு தான் சமையல் செய்ய வேண்டும். குளிக்காமல் சமையல் அறைக்குள் செல்லக் கூடாது.

அமாவாசை நல்ல நாளா?, கெட்ட நாளா? என்பதில் பலருக்கும் மாற்றுக் கருத்து உண்டு. முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்யும் இந்த நாளில், சுப காரியங்கள் செய்வதோ, ஒரு காரியத்தை தொடங்குவதோ கூடாது என்று சொல்பவர்கள் ஏராளம். இறைவனால் உண்டான இந்த உலகத்தில் நாம் வாழும் ஒவ்வொரு தினமும் நல்ல தினம்தான். அந்த வகையில் அமாவாசை தினமும் நல்ல நாளே.

சூரியனும், சந்திரனும் நேர்கோட்டில் ஒன்றையொன்று சந்திக்கும் தினம், அமாவாசை. இந்த நாளில் இறந்து போன நம் முன்னோர்களின் ஆன்மாக்கள், புண்ணிய லோகத்தில் இருந்து பூமிக்கு வரும். தங்களது தலைமுறைகளைச் சூட்சமமான முறையில் கண்காணித்து, அவர்கள் தொடங்கும் காரியங்களைக் கனிவோடு பார்ப்பார்கள். அந்த காரியம் வெற்றிபெற ஆசிர்வதிப்பார்கள். எனவே இந்த நாளும் நல்ல நாள்தான்.

எனவே பித்ருக்கள் என்று அழைக்கப்படும் நம் முன்னோர்களை வழிபட்டு, அவர்களுக்கு மரியாதை செய்யும் அமாவாசை தினத்தில், புதிய காரியங்களைத் தொடங்கினால், அது நிச்சயம் நல்லவிதமாகவே நடைபெறும்.

அமாவாசை நாளில் நம் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுப்பதோடு, வீடு, வாசல் இல்லாத ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது சிறந்த பலனைத் தரும். ஆடி அமாவாசை என்று இல்லாமல், ஒவ்வொரு அமாவாசையன்றும் தங்களால் இயன்ற அளவு உணவை அன்னதானம் செய்யலாம். பசு, காகம், நாய், பூனை போன்ற ஜீவராசிகளுக்கும் உணவு அளிக்க வேண்டும்.

அமாவாசை பிதுர் தர்ப்பணம் மற்றும் அன்னதானம் ஆகியவற்றை குல தெய்வம் இருக்கும் இடத்தில் செய்வது நல்லது. முடியாதவர்கள் தங்கள் இஷ்ட தெய்வம் இருக்கும் இடத்தில் செய்யலாம். அதுவும் இயலாதவர்கள் வீட்டில் வைத்து செய்யலாம். வீட்டில் செய்ய நினைப்பவர்கள், சூரிய உதயத்துக்கு முன்பாக எழுந்து குளித்து உடலை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். அன்று அரை நாள் விரதம் இருந்து புரோகிதரை வைத்து தர்ப்பணம் கொடுக்கலாம். அதுவும் முடியாதவர்கள் எள்ளும், தண்ணீரும் இறைத்து வழிபடலாம். அதன் பிறகு சூரிய பகவானை பார்த்து வணங்க வேண்டும். அன்னதானம் செய்ய முடியாதவர்கள், ஒரு பசு மாட்டிற்கு 9 வாழைப்பழத்தை வழங்கலாம்.

முன்னோர்களை வழிபட்டு அவர்களின் ஆசியை பெறுவதுடன், பித்ரு தோஷம், பித்ரு சாபம் ஆகியவற்றில் இருந்தும், பலவிதமான துன்பங்களில் இருந்தும் விடுபடலாம்.

அமாவாசையன்று தலையில் எண்ணெய் தடவக் கூடாது. புண்ணியத் தலங்களில் உள்ள கடல் அல்லது நதியில் நீராடலாம். ஒவ்வொரு மாதமும் வரும் அமாவாசையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வேண்டும். அது முடியாதவர்கள், ஆடி அமாவாசையில் தர்ப்பணம் கொடுத்தாலே, ஆண்டு முழுவதும் தர்ப்பணம் கொடுத்த பலன் கிடைத்து விடும்.



# ஆழ ஊடுருவும் அணியினரால் படுகொலை செய்யப்பட்ட பிரதேச செயலாளரின் நினைவாக இரத்ததான நிகழ்வு!

**(ஜெகதீஸ்வரன் டிஷாந்த்)**

முன்னை நாள் துணுக்காய்ப் பிரதேச செயலாளர் அமரர் நா.நந்தகுமார் நினைவாக இரத்ததான நிகழ்வு நேற்று துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக பணியாற்றிய அமரர் நா.நந்தகுமார் தனது கடமை நேரத்தின் போது 29.06.2008 ஆம் ஆண்டு உயிரிழந்திருந்தார்.

அவரது நினைவு தினத்தை நினைவு கூறும் முகமாக வருடந் தோறும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் இந்த வருடமும் அவரது ஞாபகார்த்தமாக இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் அமரர் நந்தகுமார் அவர்களின் திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை அவரின் துணவியார் அணிவித்தார். தொடர்ந்து சுடரேற்றி அஞ்சலி இடம்பெற்ற பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதேச செயலாளர் ராமதாஸ் ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் ஸ்ரீஜெயராம் நித்தியா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் தேக்கங்காடு பகுதியில் பணியின் நிமித்தம் சென்று வரும்போது இரானுவத்தினரின் மிலேச்சத்தனமான கிளைமோர் தாக்குதலில் அப்போதைய துணுக்காய் பிரதேச செயலாளராக கடமையில் இருந்த நாகலிங்கம் நந்தகுமார் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் வவுனியாவில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்














**(கி.வசந்தன்)**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் ஏற்பாட்டில் வவுனியாவில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாநகரசபை முன்றிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன்பாக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சு.தவபாலன் தலைமையில் இந்நிகழ்வு ,டம்பெற்றது.

இதன்போது மரணித்த உறவுகளுக்காக கறுப்பு ஜூலை படுகொலைப் பதாதைக்குத் தீபம் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், கறுப்பு ஜூலைப் படுகொலை தொடர்பில் கருத்துரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வவுனியா மாநகர முதல்வர் சு.காண்டீபன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாநகர சபை உறுப்பினர் தர்மரட்ணம், வவுனியா வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் சஞ்சுதன் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# காத்தான்குடியில் வடிகான் மூடியைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான நகரசபை உறுப்பினர் உட்பட மூவருக்குப் பிணை



(கனகராசா சரவணன்)

காத்தான்குடி நகரசபைக்குச் சொந்தமாக வடிகான் கொங்கிறீற் மூடியைத் திருடச் சென்றனர் என்ற் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நகரசபை சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவர் உட்பட 3 பேரையும் மட்டக்களப்பு நீதிவான் நேற்றுப் புதன்கிழமை இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டுபேர் கொண்ட ஆள்பிணையில் செல்ல உத்தரவிட்டு எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டு ஒத்திவைத்தார்.




காத்தான்குடி நகரசபையின் சுயேச்சைக்குழு உறுப்பினரின் வட்டாரமான கல்முனை பழைய வீதியில் இருக்கும் வடிகான் ஒன்று மூடி இல்லாமல் பலவருடங்களாக இருந்துள்ளது. இதனால் அந்தப் பகுதி பாடசாலை மாணவர்கள், பள்ளிவாசலுக்குச் செல்வோர் உட்பட அந்த வீதி ஊடாக பாதசாரதிகள் பிரயாணிக்க முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கிவந்துள்ளனர்.

இது தொடர்பாக சுயேச்சைக்குழுவின் நகரசபை உறுப்பினரின் வட்டாரத்தைச் சேர்ந்த பொதுமக்கள் உறுப்பினரிடம் வடிகான் மீது இருந்த மூடி இல்லாததால் அந்த மூடியை அமைத்து தருமாறு கடித மூலம் கோரிக்கையிட்டனர். இந்த கோரிக்கை தொடர்பாக அந்த உறுப்பினர் நகரசபை தவிசாளரிடம் கடித மூலமாகவும் வாய்மூலமாகவும் அந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தருமாறு கோரியுள்ளார். ஆனால் கடந்த இரண்டு மாதங்களாகியும் தவிசாளர் அதனை நிறைவேற்றிக் கொடுக்கவில்லை

இதன் காரணமாக நகரசபை உறுப்பினர் அந்த பகுதியில் உள்ள வடிகானுக்கு அருகாமையில் அநாதாரவாக வீதிக்கு அண்மித்த பகுதில் கைவிடப்பட்டிருந்து வடிகான் மூடி ஒன்றை தனது சொந்த பணத்தில் இருந்து மணல் அகழும் கனரக வாகனம் ஒன்றை 10 ஆயிரம் ரூபா பணத்துக்கு வாடகைக்கு அமர்த்தி அதனைத் தூக்கி கொண்டு வடிகான் மீது வைதத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சுயேச்சைக் குழு உறுப்பினர் தமது களஞ்சியசாலையில் இருந்த - நகரசபைக்குச் சொந்தமான வடிகான் மூடியை திருடிச் சென்றுள்ளார் எனப் பொலிஸ் நிலையத்தில் நகரசபை களஞ்சியசாலை பொறுப்பாளர் முறைப்பாடு ஒன்றை நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை வழங்கியம்சியை அடுத்து அந்த உறுப்பினர் உட்பட 3 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நேற்றுப் புதன்கிழமை மட்டு. நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிராளிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஹக்கீம் தலைமையில் 5 சட்டத்தரணிகள் ஆஜராகி, அந்த பகுதியில் வடிகான் மூடி இன்றி ஆபத்தாகக் கிடந்த வடிகான் மூடியை சீர் செய்வதற்காக அருகாமையில் இருந்த நகரசபைக்கு சொந்தமான மூடியை எடுத்து அந்த வடிகானை சீர் செய்தனர் எனக் குறிப்பிட்டு அவர்களுக்கு பிணைகோரி சமர்ப்பணம் முன்வைத்தனர்.

இதனையடுத்து நீதிவான் அவர்களை ஆள் பிணையில் விடுவித்தார்.

இது தொடர்பாக பிணையில் வெளிவந்த நகரசபை உறுப்பினர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

நகரசபை தவிசாளர் ஓர் அரசியல் பழிவாங்கல் செய்து என்னை மட்டம் தட்டவேண்டும் என இந்த வேலையைச் செய்துள்ளார். அந்தப் பகுதியில் இருந்த சுமார் 10 அடி தூரம் இருந்த வடிகான் மூடியை நகர்த்தி பாதுகாப்பற்று கிடந்த வடிகான்மீது வைத்து சீர் செய்தமை திருட்டா?

நகர சபையில் அவர்கள் மட்டும் மக்களுக்கு சேவையை செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டில் அவர் செயற்படுகின்றார். எனக்கு ஒரு அவமானப் பெயரை ஏற்படுத்த வேண்டும் என இதனை செய்துள்ளார். எனவே இவ்வாறான அச்சுறுத்தலுக்கு அடிபணியாது மக்களுக்காக நாம் தொடர்ந்து நேர்மையாக பணியாற்றுவோம். – என்றார்.

# வரலாற்றை மறைக்கவும் மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கின்றது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு


வரலாற்றை மறைக்கவும், மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயல்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“1983ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் உந்துதலுடன், குறிப்பாகக் கொழும்பு உட்பட வடக்கு கிழக்குக்கு வெளியே திட்டமிடப்பட்டு தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர்.

இராணுவத்தினரும், பொலிஸாரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

சில சாதாரண சிங்கள மக்கள், தங்களின் நண்பர்களைப்பாதுகாப்பதற்காக தங்களால் முடிந்த அளவு, தமிழ் மக்களை மறைத்து வைத்திருப்பதற்கும் உதவியிருந்தார்கள்.



தற்போதைய அரசாங்கம் தங்களை சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதிகள் இல்லை என்று கூறி வருகின்றது.

எனினும், வடக்கு கிழக்கு மக்கள் கறுப்பு ஜுலை தினத்தை நினைவு கூரும் இன்றைய தினம், அரசாங்கம் தெற்கில் இருந்து இளைஞர் குழுக்களை வடக்கிற்கு அனுப்புகிறது.

அந்த நினைவு கூரலை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் சகோதரத்துவம் என்ற பெயரில் அரசாங்கம் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

ஜே.வி.பி அரசாங்கத்துக்கு இனவாதம் இல்லை என்றால், இன்றைய தினம் கறுப்பு ஜுலையை நினைவு கூர்ந்திருக்க வேண்டும்.

இன்றைய தினத்தை சகலரும் நினைவு கூரும் தினமாக தற்போதைய அரசாங்கம் மாற்றியமைத்திருக்க வேண்டும்.

எனினும், இதற்கு மாறாக வரலாற்றை மறைக்கவும், மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயல்கிறது.

உத்தியோகபூர்வ மன்னிப்பு இதுவரையில் கேட்கப்படாத நிலையில், வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் கறுப்பு ஜுலையை நினைவு கூருகின்றனர்.” – என்றார்.

---

# இன்றும் நாளையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் அரசியல் கைதிகளை மீட்கும் மக்களின் போராட்டம்

முப்பது ஆண்டுகளாக சிறையில் ஏக்கத்துடன் இருக்கின்ற தமிழ் உறவுகளை மீட்பதற்காக இன்று 24 ஆம் திகதி மற்றும் நாளை 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என “குரலற்றவர்களின் குரல்“ அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் அழைப்பு விடுத்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறைகளில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் நினைவாக இன்றும் நாளையும் மாலை 3 மணிக்கு அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாக உள்ளன. அதனை முன்னிட்டு இன்று 24ஆம் திகதி காலை 10 மணிக்கு சிறைக் கூடங்களை காட்சிப்படுத்தும் செயற்பாட்டோடு ஆவணப்படம் ஒன்றும் வெளியீடு செய்யப்படவிருக்கிறது.

சிறைக்குள் ஆயுள் தண்டனை கைதியாக இருந்த கைதியின் விடுதலை தொடர்பாக பல விடயங்கள் மற்றும் ஆவணங்களை உள்ளடக்கிய ஆவண நூல் அறிமுகம் செய்யப்படவிருக்கிறது.

வருகின்ற மக்கள், மாணவர்கள் கண்காட்சி கூடத்தை இரண்டு நாளும் பார்வையிட முடியும். இன்று மாலை 4:30 இலிருந்து ஆற்றுகை அரங்க நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

இந்தவிடத்துக்கு வருகை தருகின்ற பொதுமக்களிடமிருந்து விடுதலை நீர் சேகரிக்கின்ற செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்ச்சியாக வீட்டில் இருந்து வருகின்ற ஒவ்வொருவரும் தமிழர்களுடைய விடுதலையை நெஞ்சில் நிறுத்தி தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை பெற வேண்டும் என்று ஆத்மார்த்தமாக பிரார்த்தித்துக் கொண்டு அந்த நீரினை கொண்டு வந்து எங்களுடைய பொதுவான பானைகளில் விடும்படி கேட்டுக்கொள்கிறோம்.




முப்பது ஆண்டுகளாக சிறையில் ஏக்கத்துடன் இருக்கின்ற உறவுகளை மீட்பதற்கான செய்கருமத்திற்காக ஒன்றிணைந்து அனைவரும் குரல் கொடுத்து மிகுதியாக இருக்கின்ற உறவுகளை சிறை மீட்பதற்கு உங்களுடைய பூரண ஆதரவை ஒத்துழைப்பையும் நாங்கள் வேண்டி நிற்கின்றோம்.

தொடர்ந்து விடுதலை விருட்சம் செயற்பாடு மூன்று மாதங்களுக்கு இடம்பெறும். வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டத்திலும் ஒரு விருட்சம் நடப்படவுள்ளது. அதற்கான விடுதலை நீர் உலகம் முழுவதும் சேகரிக்கும் செயற்பாடு ஆரம்பித்து இருக்கிறது. விடுதலையை நேசிக்கின்ற – விடுதலையை விரும்புகின்ற – மனிதாபிமானம் கொண்ட அனைவரும் இதில் பங்கு கொள்ள முடியும்.

தமிழர் தாயகத்தை நேசிக்கின்ற தமிழர்கள், புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கு இலங்கைக்கு விஜயம் செய்கின்ற பொழுது உங்களுடைய வீடுகளில் தற்காலிகமாக வசிக்கின்ற நாடுகளில் இருந்து இந்த விடுதலை நீரை கொண்டு வந்து 27 புதுமை மாதா கோயில் கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலும் நல்லூர் திருவிழா காலத்தில் சிவகுரு ஆதீன வளாகத்துடனும் எமது கொட்டகை அமைக்கப்படவுள்ளது. அதிலும் அந்த நீரை தந்து குறித்த செயற்பாட்டை வலுப்படுத்தி பூரண ஆதரவை எதிர்பார்த்து நிற்கிறோம்.

எங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் பெரிய நிதி வளங்களைக் கொண்ட அமைப்பல்ல. எந்த நிதியையும் நாம் இதுவரை கையாளவில்லை. இவ்வாறான செயற்பாடுகளுக்கு பொதுமக்களிடமிருந்து பொதுவாக உண்டியல் குலுக்கல் மூலம் தான் நிதியைப் பெறுகிறோம். எனவே விடுதலைக்கான இந்த பயணத்தில் எங்களுடைய செயற்பாட்டுக்கு உங்கள் பூரண ஆதரவையும் நிதிப் பங்களிப்பையும் செய்யும்படியும் கோருகிறோம். இரண்டு நாள் போராட்ட களத்தில் நேரடியாக நிதியை வழங்கி பங்களிக்க முடியும் – என்றார்.



# வவுனியா ரயில் நிலையம் அருகில் முன்னிரவில் திடீரென்று பரவிய தீ!

## விரைந்து செயற்பட்ட மாநகரசபை





(கி.வசந்தன்)

வவுனியா ரயில் நிலையம் அருகில் இருந்த மரம் ஒன்றில் திடீரென தீப் பரம்பல் ஏற்பட்ட நிலையில் மாநகரசபை தீயணைப்பு பிரிவு விரைந்து செயற்பட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா ரயில் திணைக்களத்திற்குச் சொந்தமான விடுதிகள் மற்றும் ரயில் நிலையப் பகுதி என்பன துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், வவுனியா ரயிக் நிலையம் அருகில் இருந்த மரம் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்தவர்கள் உடனடியாக வவுனியா மாநகரசபைக்கு தெரியப்படுத்தியதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினர் நீரை விசிறி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்றுத் திருகோணமலையில்

(ஏ.எச்.ஹஸ்பர்)

தமிழ் மக்களின் வாழ்வியல் வரலாற்றில் மறக்க முடியாத, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிர் மற்றும் உடமைகள் அழிக்கப்பட்ட, இன அழிப்புகளில் ஒன்றான கறுப்பு ஜூலையை நினைவு கூறும் முகமாக பொது நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை திருகோணமலை கடற்கரையில் உள்ள வெலிக்கடை தியாகிகள் அரங்கில் இடம் பெற்றது.இதனை திருகோணமலை நண்பர்கள் வட்டம் ஏற்பாடு செய்திருந்தது.

நினைவேந்தலில் ஈகை சுடரேற்றி உணர்வு பூர்வமாக நினைவேந்தல் இடம்பெற்றது.



# யாழ். நூலகத்தை எரித்த தீயின் சுவாலை இன்றும் தமிழர்கள் மனதில் எரிந்து கொண்டே இருக்கிறது

## சகோதரத்துவ தின நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு




(பிரபாகரன் டிலக்சன்)

கடந்தகால ஆட்சியாளர்கள் யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்தார்கள். அதனால் 97 ஆயிரம் புத்தகங்கள் தீயில் கருகின. அன்று எரியத் தொடங்கிய சுவாலை இன்றும் தமிழர்களுடைய மனதில் எரிந்து கொண்டே இருக்கின்றது என அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் சகோதரத்துவ தின நிகழ்வுகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

1983ஆம் ஆண்டு என்பது எங்களுடைய இலங்கைக்கு கரும்புள்ளியை ஏற்படுத்திய நாள். 1983ஆம் ஆண்டிற்கு முன்னர் வரை எல்லா இன மக்களும் இலங்கையர்களாக வாழவேண்டும் என நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது இருந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. மாறாக வேட்டுக்கள் அல்லாமல் வோட்டுக்கள் மூலம் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வை காணலாம் என எண்ணி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிட்டார்கள். ஆனால் அன்றைய ஆட்சியாளர்களோ வோட்டுக்கு பதிலாக வேட்டுக்களை தீர்த்து யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்தார்கள். அதனால் 97 ஆயிரம் புத்தகங்கள் தீயில் கருகின. அன்று எரியத் தொடங்கிய சுவாலை இன்றும் தமிழர்களுடைய மனதில் எரிந்து கொண்டே இருக்கின்றது.

1983இல் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 13 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களுடைய உடல்கள் நாடு முழுவதும் கொண்டு செல்லப்பட்டன. கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்கள் கொண்டு செல்லப்பட்ட பகுதிகளில் இருந்த தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். சித்திரவதை செய்யப்பட்டார்கள். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

சிறையிலிருந்த தமிழ்க் கைதிகளும் சிறைச்சாலைக்குள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள். இதன்போதே குட்டிமணியின் இரண்டு கண்களும் தோண்டப்பட்டு அவர் கொல்லப்பட்டார்.

இவ்வாறான நிகழ்வுகளால் சிங்களவருடன் ஒன்றாக ஒரு நாட்டிற்குள் வாழ முடியாது என்ற தோரணையில் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தள்ளப்பட்டார்கள். இதனை காரணம் காட்டி இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளின் தலையீடு அதிகரித்தது.

கறுப்பு ஜூலைக்கு பின் தமிழ் மக்களுடைய ஆழ்மனதில் வேதனையாக இன்றும் புகைந்துகொண்டிருக்கக்கூடிய இனவாதத் தீயை எப்படி அணைப்பது என்ற கேள்வி எழுந்த போதுதான் மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் இயங்குகின்ற கனிஷ்ட அமைப்பான சோசலிச இளைஞர் சங்கம் 2007ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஜூலை 23ஆம் திகதியை சகோதரத்துவ தினமாக அனுஷ்டித்துவருகிறார்கள். கறுப்பு ஜூலையில் ஏற்பட்ட கரும்புள்ளியை போக்குகின்ற செயற்பாட்டினை அவர்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.

அன்றைய ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட நூலகத்தை மீள புனரமைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த முறை வரவு – செலவுத் திட்டத்தில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. – என்றார்.






# சோஷலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் சகோதரத்துவ தின நிழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

**(பிரபாகரன் டிலக்சன்)**

சோஷலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் “ஒன்றாய் நாம் பறந்திடுவோம்!“ எனும் தொனிப்பொருளில் சகோதரத்துவ தின நிழ்வுகள் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

நேற்று காலை 6.40 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து சகோதரத்துவ பயண ரயில் ஆரம்பமாகி, பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இளைஞர் விவகார அமைச்சர் எரங்க குணசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் சோசலிச இளைஞர் சங்கப் பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் உட்பட பலர் இந்த ரயில் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் ஒரு தொகுதி சிங்கள நூல்கள் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன. மேலும் தெற்கிலிருந்து வருகை தந்தவர்கள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து பேரணியாக யாழ் நகர் ஊடாக ரிம்மர் மண்டபத்தை வந்தடைந்தனர்.

பின்னர் யாழ்ப்பாணம் – ரிம்மர் மண்டபத்தில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன்போது இளைஞர் விவகார அமைச்சர் எரங்க குணசேகர, கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ் மாநகரசபை உறுப்பினர் சு.கபிலன், சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் மகேஷ் அம்பேபிட்டிய உள்ளிட்ட சோசலிச இளைஞர் சங்கத் பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மேலும் சகோதரத்துவ தினத்தின் ஒரு பகுதியாக இன்றையதினம் எழுவை தீவுக்கு சென்று 200 பனவிதைகள் நடுகை, பாடசாலைக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் தீவின் இளைஞர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

கறுப்பு ஜூலை தினத்தில் சகோதரத்துவ தின நிகழ்வுகள் யாழில் ஏற்பாடு செய்யப்பட்டமைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட பல்வேறு தரப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.























# பிரித்தானியாவில் உணர்வு பூர்வமாக நடைபெற்ற கறுப்பு ஜூலை 42 வருட நினைவு எதிர்ப்பு பேரணி

**( வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கையில் 1983 இல் இடம் பெற்ற கறுப்பு ஜூலை கலவரத்தின் 42 ஆவது வருடத்தை நினைவு கூர்ந்து எதிர்ப்புப் பேரணியொன்று பிரித்தானியாவில் நேற்று மாலை நடைபெற்றது.

1983 கறுப்பு ஜூலை 42 வருட வலி சுமந்து ஈழத்தமிழர்களின் இனப் படுகொலைக்கு எதிராக தமிழர் ஒருங்கிணைப்பு குழு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மற்றும் சர்வதேச நீதிக்கான தமிழ் ஈழ மக்கள் சங்கம் இணைந்து இந்தச்ப் பேரணியை நடத்தின.

பிரித்தானிய நாடாளுமன்ற சதுக்கத்தில் நடைபெற்ற இப் பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.








# 1983 கறுப்பு ஜூலை 42 வருட வலி சுமந்த ஈழத்தமிழர்களின் மறக்க முடியாத வடுவாகும்

## நினைவு நிகழ்வில் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் பாஸ்கரன்






(ஏ.எம்.அஜாத்கான்)

1983 கறுப்பு ஜூலை 42 வருட வலி சுமந்து ஈழத்தமிழர்களின் இனப் படு கொலை. தொடர்பான மறக்க முடியாத வடுவாகும் என்று காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் எஸ். பாஸ்கரன் தெரிவித்தார்.

கறுப்பு ஜூலை கலவரத்தின் 42 ஆவது வருடத்தை நினைவுகூரும் நினைவேந் தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை மாலை காரைதீவில் பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன் தலைமையில் நடந்தது.

இங்கு காரைதீவு பிரதேச சபை உறுப் பினர்கள் உட்பட பிரதேச மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு பாஸ்கரன் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

1983 ஆம் ஆண்டு ஜூலை, இப்போது 42 ஆண்டுகள் கழித்தும் மறக்கவும் முடியாத, மன்னிக்கவும் முடியாத துயரான காலமாக நீடிக்கின்றது.

1983 ஜூலை 23 தொடக்கம் 30 காலப்பகுதியில் தமிழினப் படுகொலை மிகவும் கொடூரமாக அரங்கேறியது. அதாவது பேரினவாத சக்திகளால் முன்னெடுக்கப்பட்ட இந்த இனப்படு கொலையிக், குறைந்தது அந்த கால கட்டத்தில் மூவாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் என அறிந்துள்ளோம். - என்றார்.

அங்கு மேலும் உரையாற்றிய காரை தீவு பிரதேச சபையின் உறுப்பினர் கோபி காந்த் தனதுரையில் -

இன்று காரைதீவு தமிழரசுக் கட்சியின் மூலமாக இந்தக் கறுப்பு ஜூலை 83 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எமது காரைதீவு பிரதேச சபையின் தவிசாளரி னால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டிலே 83 ஆம் ஆண்டும் அதற்கு முதல் 58 ஆம் ஆண்டும் இதேபோல் ஓர் இனப்படுகொலை இடம் பெற்றிருந்தது.

அதேபோல் 77 ஆம் ஆண்டும் அந்தத் தொடர் இனப்படுகொலையா னது இடம்பெற்றிருந்தது. அதன் உச்கி ரமாக 83 ஆம் ஆண்டு இந்தக் கறுப்பு ஜூலை கொடூரம் நுவரெலியா, கண்டி மற்றும் கொழும்பிலே மிகவும் பார தூர மான அளவில் இடம்பெற்றிருந்தது. சிங்களவர்களின் வெறியாட்டத்தில் பல தமிழ் அப்பாவி இளைஞர், யுவதிகள், ஏன் குழந்தைகள் கூட எரியூட்டப்பட்ட தார் தடாகத்தினுள்ளே அல்லது தார்," பரலினுள்ளே போடப்பட்ட சம்பவ மும் அன்று பதிவாயிருந்தது.. அது ஒட்டுமொத்தமான தமிழினத்தை சிங்கள நாட்டிலிருந்து அழிக்க வேண்டும் என்ற முனைப்புடன் அன்று இடம் பெற்றிரு ந்தது. அதற்கு அன்றைய சிங்கள தேச ஆட்சியாளர்களும் உடந்தையாக இருந்தனர் என்பதுதான் எங்களுக்கு உண்மையிலேயே மறக்க முடியாத வேதனையான நிகழ்வாக இருக்கின்றது.

இந்த நாட்டை சிங்கள நாடாக அறி விக்க வேண்டும், சிங்களவர் மட்டுமே வாழ வேண்டும் என்றிருந்த ஒரு கால கட்டத்திலே எங்களது உடமைகளும் உயிர்களும் சொத்துக்களும் பறிபோ கப்பட்ட அந்த கறுப்பு ஜூலையை நாங்கள் இன்று நினைவு கூர்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்த கறுப்பு ஜூலையை ஒத்ததாக தான் அண்மையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வும். ஏன் தம்பி பாலச்சந்திரன், இசைப்பிரியா போன்ற வர்களது சாவும் கூட மிகவும் கொடூர மாகவும் வருந்தத்தக்கதாகவும் அமைந் தன.

அன்று தொடக்கம் இன்று வரைக் கும் மாறி மாறி வருகின்ற சிங்கள ஆட்சியாளர்கள் இவற்றைக் கண்டு கொள்வதில்லை. இதை நிறுத்த வேண்டும், இந்தப் போக்குக்கு உடனடியா கத் தடை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். எங்களது தமிழினம் இந்த திருநாட் டிலே தலை நிமிர்ந்து வாழ்வதற்கு ஒரு வழி சமைக்க வேண்டும். இதே போல் எங்களது நாட்டிலே எங்களுக்குரிய உரிமையும் இறைமையும் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கு தற்போ தைய ஆட்சியாளர்கள் உறுதி தர வேண்டும் என்று கேட்டு இந்தக் கருப்பு ஜூலையிலே அன்று ஆகுதியாகிய அத் தனை உயிர்களுக்கும் இந்த இடத்திலே அஞ்சலி செலுத்தி நாங்கள் எங்களது வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்கின் றோம்.- என்றார்.

# தாவடியில் வாள் வெட்டு; ஒருவருக்குப் படுகாயம்

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறை வீதி, தாவடியில் அமைந்துள்ள மதுபானசாலை முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற வாள் வெட் டில் படுகாயமுற்ற குடும்பஸ்தர் ஆபத் தான நிலையில் யாழ்ப்பாணம் போத- னா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

சுதுமலை மத்தி, மானிப்பாயைச் சேர்ந்த நேசராஜன் சர்வேந்திரன் (வயது 51) என்பவரே படுகாயமுற்ற நிலை யில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

தாவடியில் அமைந்துள்ள மதுபானக் கடைக்கு அருகில் இரண்டு அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இவர் வாளால் வெட்டப்பட்டுள்ளார்.

வயிறு மற்றும் இடது கையில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மயங்கிய நிலையில் அவர் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் இன்னும் அடையாளம் காணப்பட வில்லை.

# இன்றைய ராசி பலன்கள் - 24.07.2025




இன்று நீங்கள் அமைதியுடன் இருக்க வேண்டிய நாள். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உங்கள் பிரியமானவர்களிடம் சரியான முறையில் தகவலை பரிமாறத் தவறுவீர்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. உங்கள் கீழ் பணிபுரிவோருடன் மோதல்கள் ஏற்படலாம். கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவை பாதிக்கும்.

இன்று அதிகமான செலவினங்கள் ஏற்படும். உங்கள் பணத்தை நன்கு நிர்வகிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கடின உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமானதாக இல்லை. உங்கள் முயற்சியில் தாமதங்களை எதிர்கொள்வீர்கள். வெற்றி பெறுவதற்கு நல்ல திட்டமிடல் தேவை. தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

பணியிடத்தில் வேலை அதிகமாக இருக்கும். தவறுகள் நேராமல் இருப்பதற்கு கவனமாக வேலை செய்ய வேண்டும்.

இன்று சரியான புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் நீங்கள் உங்கள் துணையிடம் உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்த தவறுவீர்கள்.

இன்று பண இழப்புகள் காணப்படுகின்றன. உங்கள் அலட்சிய மனப்பான்மை பண இழப்பிற்கு வழிவகுக்கும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்பிருப்பதால் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.




பொறுமையின்மை மற்றும் உறுதியின்மை காரணமாக நீங்கள் முன்னேற இயலாது. இதனால் பதட்டமான சூழ்நிலை காணப்படும். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்துங்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும். அவர்களால் பிரச்சினைகள் நேரலாம்.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக சில தொல்லைகள் ஏற்படும். உணர்ச்சிவசப்படுவதை தவிர்த்து விடுங்கள். உங்கள் துணையாருடன் வெளிப்படையாகப் பேசுங்கள். அதனால் பிரச்சினைகளை சுமகமாக தீர்க்க இயலும் மற்றும் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.




இன்று நீங்கள் இலட்சியத்தை அடையும் ஆற்றலுடன் திகழ்வீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் நல்ல விளைவுகளை உருவாக்கும். திறமையான தகவல் பரிமாற்றத்தின் மூலம் நீங்கள் மிகுந்த பலனடைவீர்கள்.

பணியில் உங்கள் திறமைகளை காட்டுவீர்கள். ஆர்வத்துடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயலுக்காக பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். சிறந்த மற்றும் ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்த அது உதவும்.

இன்று நிதிநிலைமை மிகவும் பிரகாசமாக இருக்கிறது. இன்றைய தினம் பயனுள்ள முதலீட்டுக்கான முடிவுகளை எடுக்க சாதகமானதாக உள்ளது.




இன்று நீங்கள் வெறுமையையும் பாதுகாப்பற்ற தன்மையையும் உணர்வீர்கள். எந்தவொரு விஷயத்தையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள். சமநிலையோடு அணுகாவிட்டால் விஷயங்கள் உங்கள் கைமீறிப் போய்விடும்.

வேலையில் பிரகாசிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. உங்கள் திறமைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் தரத்தையும் திறமையையும் வெளிக்காட்டும்.

இன்று அன்யோன்யமும் அன்பும் அதிகமாக காணப்படும். நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் கடின உழைப்பினால் நீங்கள் இன்று கணிசமாக பணம் சம்பாதிக்க முடியும்.




உங்கள் முக்கியமான விஷயங்களைக் கூட இன்று சரியான நேரத்தில் முடிப்பதில் தாமதம் ஏற்படும். திரைப்படம் பார்ப்பதன் மூலம் அல்லது பாடல்களைக் கேட்பதன் மூலம் நீங்கள் நன்றாக உணர்வீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாள் ஏற்புடையதல்ல.

வேலைச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் உங்கள் வேலையை நன்றாகச் செயல்படுத்த முடியும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான மற்றும் திருப்திகரமான நல்லுறவைப் பேண நீங்கள் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். எனினும் பரம்பரை சொத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு முக்கியமான இலட்சியங்களை அடைவதற்கு நல்ல வாய்ப்புடன் கூடிய பிரகாசமான நாள். உங்கள் எதிர்பார்ப்பைக் காட்டிலும் நல்ல பலன்கள் கிட்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

அதிகமான வேலைப்பளு உங்களை ஆக்கிரமித்து உங்களை பிஸியாக வைத்திருக்கும். அதிகப்படியான வேலை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

சமநிலை நோக்கும் நகைச்சுவை அனுகுமுறையும் உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும். உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள மன அமைதியுடன் பேசுங்கள்.

இன்றைய அதிகப்படி பணவரவால் உங்களின் சேமிப்பு உயரும். திருப்திகரமாகவும் இருக்கும்.உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்கு ஆழ்ந்த திருப்தியை உண்டாக்கும். இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். விருந்தாளிகளின் வருகை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட முடிப்பீர்கள். உங்கள் வேலை சம்பந்தமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியான அணுகுமுறையுடன் பணிபுரிவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒன்றினைந்து மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் ரிலாக்ஸ்டாக இருப்பீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு வசீகரமானதாக அமையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.07.2025




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. முடிவெடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். உங்கள் அன்புக்குரியவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் உங்களுக்கு உற்சாகமான வாய்ப்புகள் கிடைக்கும். அலுவலகச் சூழல் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இனிமையான மற்றும் ஊக்கமான வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். இனிமையான தருணங்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு குறைந்து காணப்படும். இழப்பு ஏற்படா வண்ணம் பணத்தை பத்திரமாக பாதுகாக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும்.




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். மன உறுதி மூலம் இன்று நீங்கள் உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் முயற்சிகள் மற்றும் உறுதி நேர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சோர்வான மனநிலை காரணமாக உங்கள் துணையை தவறாக புரிந்து கொள்வீர்கள். அமைதி மற்றும் எளிதான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும்.

பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கிடைக்கும் அதிகப்படி பணத்தை உங்களால் சேமிக்க முடியும்.




இன்று நீங்கள் வெற்றி பெறுவதற்கு உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில்இன்று நீங்கள் பின் தங்கி இருப்பீர்கள். சிறந்த யுக்திகளின் மூலம் உங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும்.

பணியிடத்தில் மேலதிகாரியுடன் சண்டைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள். மேலதிகாரியை அனுசரித்து நடந்துகொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை களைந்து விடுங்கள். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சந்தேக உணர்வுக்கு ஆட்பட்டு அதை உங்கள் துணையிடமும் வெளிப்படுத்துவீர்கள். கண்டிப்பாக அதை நீங்கள் தவிர்க்க வேண்டும்.




இன்று உங்களிடம் காணப்படும் தாழ்வு மனப்பான்மை காரணமாக சிறிது அவநம்பிக்கையோடு காணப்படுவீர்கள். அதனால் இன்று சற்று பின்தங்கியிருப்பீர்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உங்கள் சக பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பார்கள். இதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.

உங்களின் இனிமையான பேச்சால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும்.

அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். அதனால் சேமிப்பு குறைந்து காணப்படும்.

# கல்முனை மாநகர சபைப் பிரதேசங்களில் மாட்டிறைச்சிக்குக் கட்டுப்பாட்டு விலை!




(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒரு கிலோ தனி இறைச்சியை 2,300 ரூபாவுக்கும் 250 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ இறைச்சியை 2,000 ரூபாவுக்கும் விற்பனை செய்வது என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நேற்றுப் புதன்கிழமை மாநகர சபையில் இறைச்சிக் கடைக்காரர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர்களது இணக்கத்துடன் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சி எல்லையின்றி மிகக் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடம் இருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கப் பெற்று வருகின்ற முறைப்பாடுகளையடுத்து மாநகர ஆணையாளர், இறைச்சிக் கடைக்காரர்களை மாநகர சபைக்கு அழைத்து இறைச்சி விலையை கட்டுப்படுத்துவது தொடர்பாக, அவர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளருடன் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளசி மற்றும் உள்ளூராட்சி உதவியாளர் தாரிக் அலி சர்ஜூன் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டு மேற்படி நிர்ணய விலையில் இறைச்சியை விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், அனைத்து இறைச்சிக் கடைகளிலும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய விலையில் இறைச்சி விற்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு கல்முனை மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.